NP – 685

VISHWA CHETHANA DEGREE COLLEGE ★ Anekal - 562106 ★

**IV Semester B.Com. Degree Examination, June/July 2025**
**(NEP) (Freshers + Repeaters)**
**TAMIL LANGUAGE (Paper – IV)**

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(4×1=4)**

1) 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'
என்ற தேசபக்திப் பாடலைப் பாடியவர்
 1) நாமக்கல் கவிஞர் 2) பாரதியார்
 3) பாரதிதாசன் 4) மு. மேத்தா

2) 'வேலைகளல்ல வேள்விகளே' என்ற கவிதையை எழுதியவர்
 1) மு. மேத்தா 2) வைரமுத்து
 3) காமராசன் 4) தாராபாரதி

3) செய்யுளின் உறுப்புக்கள் இத்தனை வகைப்படும்
 1) 6 2) 8
 3) 5 4) 7

4) 'பாஞ்சாலி சபதத்தின் ஆசிரியர்
 1) பாரதியார் 2) பாரதிதாசன்
 3) உ. வே. சாமிநாதர் 4) மு. மேத்தா

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(4×4=16)**

1) சேவை செய்யும் நல்லவன்
செம்மை கண்ட வல்லவன்
தேவையுள்ள யாரையும்
தேடிச் சென்று சேருவான்

2) மூங்கையின் பாட்டானோம்
முடவன்கை எழுத்தானோம்
முழுக்குருடன் படிக்கின்றார்

3) "உண்ண கனி
ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து உணர்வுக்கு விருந்து"

4) சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்

5) ''விளையாடாதீங்க புள்ள காலங்காத்தால ! அதுக் கெல்லாம்
நேரம் இல்ல, ரொம்ப வேல கெடக்குது சில்லறை கொடுங்க!''

6) திருப்பதிக்கு ஒருவாட்டிப் போயிருந்தேன் ! கோயில்
வாசல்ல கையேந்தி நின்னுக்கிட்டு இருந்தார்

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×6=24)**

1) இன்னொரு சுதந்திரம் என்னும் கவிதையின் செய்திகளை தொகுத்து எழுதுக.

2) திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை குறித்து விளக்கி வரைக.

3) அர்ஜூன் சபதம் குறித்து விளக்குக.

4) சங்கரனின் பாத்திரப்படைப்பினை விளக்கி எழுதுக.

5) தொலைந்து போனவர்கள் என்ற நாவலின் தலைப்புப் பொருத்தம் குறித்து எழுதுக.

6) 'புதிய சமுதாயம்' – என்னும் பாடலின் கருத்தினை விளக்குக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×4=16)**

1) வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

2) தொடையின் வகைகளைக் குறிப்பிடுக.

3) சீரின் வகைகளைக் கூறி அதன் வகைகளில் இரண்டினை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

4) உவமையணியைச் சான்றுடன் கூறுக.

5) இல்பொருள் உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

6) வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் கூறுக.

---